IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

பேராசிரியரின் பார்வையில் திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்

எ. நா. ஜோதி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பதிவு எண் : 2022PHDPTTM04
தமிழ்துறை திராவிடப்பல்கலைகழகம்,சீனிவாசவனம்,குப்பம் 517426 ஆந்திரா.
ORCID: https:// orcid.org/ 0000 – 0002 -1450 - 9735
முனைவர் பூ.சு.கணேஷ் மூர்த்தி
உதவிப் பேராசிரியர், தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை, திராவிடப்பல்கலைக்கழகம், சீனிவாசவனம்,குப்பம் 517426 ஆந்திரா.
ORCID: https:// orcid.org/ 0000 - 0003 – 3734 - 2402

ஆய்வுச்சுருக்கம்

பேராசிரியர் ந.சுப்புரெட்டியார் அவர்கள் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்திற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் பெரும் பங்கு ஆற்றியுள்ளார். 1960 ஆம் ஆண்டு திருப்பதியில் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழத் துறையை நிறுவி 17 வருடங்கள் தமிழ் தொண்டாற்றினார். ஆந்திர மாநிலத்தில் வாழும் தமிழர்களுக்காக தமிழ் பேராசிரியராக பணியாற்றினார். அதுவரையில் தமிழகத்திற்குச் சென்று தமிழ் பயின்று வந்த மாணவர்களுக்கு திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் படிப்பது ஓர் வரபிரசாதமாக அமைந்தது. பேராசிரியர் அவர்கள் தமிழ் இலக்கியத்திற்கு எறக்குறைய 135 நூல்களை எழுதியுள்ளார், அனைத்தையும் தமிழக அரசு நாட்டுடமையாக்கியுள்ளது. சென்ற நூற்றாண்டில் தமிழுக்கு தொண்டற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவருள் ஒருவர் இவர் ஆவார். தனது இளமை பருவம் முதலே எம்பெருமானுக்கும் தமிழ்

இலக்கியத்திற்கும் தொண்டற்றுவதை தம் இரு கண்களாக போற்றியவர். பேராசிரியர் திருவேங்கடத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் மீது கொண்ட பக்தியினால் 108 திவ்ய தேசங்களில் 102 திவ்ய தேசங்களுக்குச் சென்று திருமாலை வழிபட்டார். அவர் சென்று வந்த திவ்ய தேசங்களில் பாண்டி நாட்டு திருப்பதிகள் , சோழ நாட்டு திருப்பதிகள், வட நாட்டு திருப்பதிகள், நடு நாட்டு திருப்பதிகள், தொண்டை நாட்டு திருப்பதிகள், மலை நாட்டு திருப்பதிகள் போன்ற திருத்தலகளுக்கு சென்று திருமாலை தரிசித்தார். பேராசிரியரின் நூல்களை படித்தாலே 102 திவ்ய தேசங்களுக்கு சென்று வந்த புண்ணியம் நமக்கு கிடைக்கும். பேராசிரியர் அவர்கள் தமிழுலகிற்கு 135 நூல்களை எழுதியுள்ளார்.

முன்னுரை

இன்று பொது மக்களும் கற்றறிந்த புலவர்களும் திருப்பதி மலையையே ‘வட வேங்கடம்’ என்று கருதுகின்றனர். தேசியக்கவி பாரதியாரும் வட வேங்கடத்தை ‘வட மாலவன் குன்றம்’ என்றே வழங்குவதை அறியலாம்.

நீலத் திரைக்கடல் ஓரத்திலே – நின்று

நித்தம் தவம்செய் குமரிஎல்லை – வட

மாலவன் குன்றம் இவற்றிடையே – புகழ்

மண்டிக்கிடக்கும் தமிழ்நாடு!

என்று தமிழ் நாட்டு எல்லையை வகுத்துக்காட்டும் பாடல் வழி அறியலாம். தொல்காப்பியப் பாயிரத்தில் கூறப்பெற்ற ‘தமிழ் கூறும் நல் உலகமே’ பாரதியின் கருத்தில் புதிய வடிவம் கொண்டு நிற்பதை எளிதில் கண்டு தெளியலாம். இம்மலை 14’ வட குறுக்கையுள்ளும் (*North Latitude*) 80’ கீழ் நெடுக்குக் கோட்டிலும் (*Latitude*) அடங்கி, சென்னைக்கு வடகிழக்குத் திசையில் சுமார் 85 கல் தொலைவில் அமைந்துள்ளது. இம்மலை ‘ஏழுமலை’ என்றே வழி வழியாக வழங்கப் பெற்று வருகின்றது.

சங்க இலக்கியக் குறிப்புகள்

சங்க இலக்கியங்களில் வட வேங்கடத்தைப் பற்றியுள்ள குறிப்புகள் உள்ளன. பத்துப்பாட்டில் பட்டினப்பாலை, சிறுபாணாற்றுப்படை இவற்றில் உள்ள ஒருசில குறிப்புகளையும் எட்டுதொகையில் அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை போன்ற நூல்களில் வட வேங்கடத்தைப் பற்றி பல குறிப்புகளையும் காண்கின்றோம். புறப்பொருள் வெண்பாமாலையிலும் சங்கம் மருவிய நூலாகிய சிலப்பதிகாரத்திலும் இம்மலையைப் பற்றிய குறிப்புகள் காணப் பெறுகின்றன.முதலில் ஐயனாரிதனார் வாக்கினைக் காண்போம்.

“வெறிகொள் அறையருவி வேங்கடத்துச் செல்லின்
நெறிகொள் படிவத்தோய் நீயும் – பொறிகட்(கு)
இருளீயும் ஞாலத்(து) இடரெல்லாம் நீங்க
அருளீயும் ஆழியவன்”

என்ற பாடலில், ‘வேங்கடம்’ குறிப்பிடப் பெற்றிருப்பதுடன் அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவன் திருவாழியைத் தரித்துத் கொண்டிருக்கும் குறிப்பும் ‘ஆழியவன்’ என்ற சொல்லால் காட்டப் பெற்றிருப்பதை அறியலாம்.

சிலப்பதிகாரத்தில் வரும் ‘வடவேங்கடம்’ பற்றிய குறிப்பில் மாங்காட்டு மறையோன் தலயாத்திரை செய்து வருகின்றான். உறையூரையடைந்த கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளுடன் வைகறை யாமத்து அவ்வூரைக் கடந்து தென் திசையை நோக்கிச் செல்லுபவர்கள், கனன்று எழும் கதிரவன் வெப்பத்தைப் பொறுக்கலாற்றாது வழியில் ஒரு மருதநிலப் பரப்பில் வனப்புற்றுத் திகழாநின்ற ஓர் இளமரக்காவில் வழிப்போக்கர் தங்குவதற்கென்று அமைக்கப் பெற்றிருந்த இருப்பிடத்தில் இளைப்பாறுதற் பொருட்டுச் சென்று புகுகின்றனர்.அப்பொழுது தென்றிசையினின்று வடதிசை நோக்கிச் செல்லும் மறையோனும் அவ்விடத்தில் வந்து புகுகின்றான்; வருகின்றவன் ‘தீது தீர் சிறப்பின் தென்னனை’ வாழ்த்திக் கொண்டே வருகின்றான். அங்ஙன் வருகின்றவனைக் கோவலன்,

“யாது நும்மூர்? ஈங்கென் வரவு?”

என்று வினவுகின்றான். இந்த இரண்டு வினாக்களில் முன்னதினும் பின்னது சிறப்புடைத்தாதலின், அதற்கு விடை கூறும் இடத்தில் திருவரங்கம், திருவேங்கடம் இவற்றின் வருணனைகள் வருகின்றன.

இதனைத் தவிர, சிலப்பதிகாரத்தில் வேறு இரண்டு இடங்களில் வேங்கடத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்பெறுகின்றது.

“நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்

தமிழ்வரம் புறுத்த தண்புனல் நல்நாடு”

என்றும்,

“வேங்கட மலையும் தாங்க விளையுள்

காவிரி நாடும்”

என்றும் வருதலைக் காண்க.

உறையூர் காவிரியின் தென்பால் உள்ளது. திருப்பாணாழ்வார் பிறந்த திவ்விய தேசமாகும். திருவரங்கம் என்னும் திவ்யதேசம் உறையூருக்கு நேர் வடக்கில் காவிரி நதியின் அருகே உள்ளது.

“கொண்டல் வண்ணனைக்
கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன்என்
உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன்அணி
யரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள், மற்(று)
ஒன்றினைக் காணவே”

என்று திருப்பாணாழ்வார் அனுபவித்த அழகிய மணவாளன் எழுந்தருளியிருக்கும் திவ்விய தேசமாகும். பாணாழ்வாரின் வரலாற்றில் நிகழ்ந்த நிகழ்ச்சியொன்று இப்பொழுது நம் மனத்தில் எழுந்து நம்மைப் பரவசப்படுத்துகின்றது. இந்தத் திருவரங்கத்திற்கு மிக அண்மையிலுள்ளது தான் தங்கியிருந்ததுமான உறையூரிலுள்ள மாங்காட்டு மறையோன் திருவரங்கத்தை விவரித்துக் கூறுவது மிகவும் பொருத்தமேயாகும். இங்கு திருவரங்கத்தைப் பற்றி அவன் கூறிய செய்தி ஆறுவரிகளில் மிகச் சுருக்கமாக உள்ளது. ஆனால், அவன் இன்னும் நேரில் கண்டறியாத வேங்கடத்தைப் பற்றிய குறிப்புகள் சற்று

விரிவாகப் பதினொரு வரிகளில் கூறப்பெற்றுள்ளன. கோவலன் பூம்புகாரில் வாழ்ந்த பெரும் வணிகன். திருவேங்கடம் மலைநாட்டைவிட பூம்புகாருக்கு மிக அண்மையிலுள்ளது. ஆதலின், அவன் வேங்கடத்தைப் பற்றி நன்கு அறிந்திருத்தலும் கூடும். மிகத் தொலைவில் மலைநாட்டிலுள்ள மாங்காட்டுமறையோன் அறிந்திருப்பதைவிட கோவலன் திருவேங்கடத்தைப் பற்றி நன்கு அறிந்திருத்தல் கூடும் என்று கருதுவதில் தவறு ஒன்றும் இல்லை. இன்று திருப்பதி புகழ் அடைந்திருப்பதுபோல் அன்றும் அனைவருக்கும் தெரிந்துள்ள ஊராக இருந்திருப்பின், கோவலன் இந்த ஊரைப் பற்றி நன்றாகவே அறிந்திருப்பான் என்றும், அதுவும் தமிழகத்தின் வட எல்லையின் முக்கியமான ஓர் இடம் என்று அறியும் அளவுக்குத் தெரிந்திருப்பான். திருப்பதிக்கு நேரில் சென்று அவ்வூரை கண்டறியாத மாங்காட்டு மறையோன், அவ்வூரைப் பற்றி ஓரளவு நன்கு அறிந்திருக்கக்கூடிய கோவலனுக்கு மிக விரிவாக அத்திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் திருமேனியை நேரில் கண்டது போல் விவரமாகக் கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை.

வேங்கடம் – பெயர் விளக்கம்

இனி, "வேங்கடம்" என்ற சொல்லின் பொருளைக் காண்போம். "வேங்கடம்" என்ற கூட்டுச் சொல் (Compound Word) 'வேம்','கடம்'=வேங்கடம் என்றாயிற்று. 'கடம்' என்பது பாலை நிலத்தைக் குறிக்கும் சொல்லாகும்.

"பெயன்மழை துறந்த புலம்பறு கடத்துக்
கவைமுட் கள்ளிக் காய்விடு கடுநொடி
துதைமென் துவித் துணைப்புறவு இரிக்கும்
அத்தம்"

என்ற குறுந்தொகைப் பாடலில் 'கடம்' என்ற சொல் பாலையைக் குறித்தமை காண்க. சிலப்பதிகாரத்திலும் "கடம்பல கிடந்த காடுடன் கழிந்து" என்ற அடியிலுள்ள 'கடம்' பாலை நிலத்து வழியினைக் குறிக்கின்றது. 'கடம்' என்பதற்கு உரையாசிரியர் 'அருஞ்சுரம்' என்று பொருள் கூறுவர். பிங்கலந்தை 'கடம்' என்பதனை 'மலைசாரல்' என்று கூறும்.

வேங்கடத்தை ஆண்ட அரசர்கள்

இப்பகுதியை அரசர்கள் பலர் ஆட்சிபுரிந்தனர். எட்டுத்தொகை நூலாகிய அகநானூற்றிலும் புறநானூற்றிலும் 'புல்லி' என்ற ஓர் அரசன் குறிப்பிடப்பெறுகின்றான். புறநானூறு 'ஆதனுங்கன்' என்ற இன்னொரு அரசனையும் குறிப்பிடுகிறது. இனி வேங்கடத்தை ஆண்டவர்களை பார்ப்போம்.

புல்லி

இவன் தமிழகத்தின் வடஎல்லையாக விளங்கும் வேங்கடத்தையும் அதனைச் சூழ்ந்த நாடுகளையும் ஆண்டவன்.

திரையன்

பெரும்பாணாற்றுப்படையால் இவனைப் பற்றி அறியக் கிடக்கும் செய்திகள் இவை. "திருமாலை முதல்வனாகக் கொண்ட குடியிற் பிறந்தவன் திரையன்; திரைதரு மரபின் வழிவந்தவன். மலர்தலை உலகத்து மன்னுயிர் காக்கும் முரசு முழங்குதானை மூவேந்தரின் சிறப்புடையவன்.

ஆதனுங்கன்

இவன் ஒரு குறுநில மன்னன். வேங்கடமலையும் அதனைச் சூழ உள்ள நாடும் இவனுக்கு உரியவை. இவன் இரவலர் இன்மை இனிய உள்ளம் படைத்தவன். கள்ளில் ஆத்திரையனார் என்னும் தொண்டை நாட்டுப் புலவர் இளையராய் இருந்த காலத்தே இவனைச் சென்று கண்டார்.

இடைக்கால இலக்கியத்தில் வேங்கடம்

'வேங்கடம்' - பொருள் மாற்றம்

இடைக்காலத்தில் பக்தி இயக்கம் பெரும் செல்வாக்குப் பெற்ற காலத்தில் 'வேங்கடம்' என்ற சொல்லும் புதுப்பொருளைப் பெற்றது என்று கருதலாம். ஈண்டு திருவாய் மொழியிலுள்ள ஒரு பாடலை ஆய்வது பொருத்தமென்று கருதுகின்றேன்.

“வேங்கடங்கள்மெய் மேல்வினை முற்றவும்

தாங்கள் தங்கட்கு நல்லன வேசெய்வார்

வேங்க டத்துறை வார்க்கு நமஎன்னல்

ஆங்க டமை அது சுமந் தார்கட்கே”

ஆழ்வார்கள் காலம் வரை ‘வேம்-வெந்துபோம், கடங்கள்-பாவங்கள்’ என்று வழங்கின. தன்னை அடைந்தவர்களுடைய பாவம் அனைத்தையும் ஒழிப்பதனால் இத்திவ்விய தேசத்தை ‘வேங்கடம்’ எனக் கூறத்தொடங்கினர். இடைக்காலத்தில் ‘வேம்’ என்ற சொல் ‘பாவம்’ என்ற பொருளையும் ஏற்க வேண்டியதாயிற்று. ‘கடம்’ என்ற சொல் ‘எரித்தல்’ என்ற பொருளை ஏற்றது. ‘வேங்கடம்’ என்ற கூட்டுச்சொல் ‘பாவங்களை எரித்தல்’ என்ற பொருளில் வழங்கி, மேலும் அது ‘பாவங்களை எரிக்கும் இடம்’ என்றும் வழங்கத் தொடங்கியது. இன்னும் சிலர் ‘வேங்கடம்’ என்ற திவ்விய தேசம் அழிவில்லாத ஐசுவரியங்களை அளிக்கும் இடமாகும் எனவும்

கருதுகின்றனர்.

வேங்கடத்தின் புகழ்

ஆழ்வார் பெருமக்களால் மங்களாசாசனம் பெற்ற திருவேங்கடம் பதினொன்றாம் நூற்றாண்டில்தான் பெரும்புகழ் அடையத் தொடங்கியது. இராமாநுசர் திருமலைக்கு மூன்று தடவை வந்ததாக அவர் வரலாற்றால் அறியக்கிடகின்றது. இன்றும் திருமலையில் நடைபெறும் ஒழுகலாறுகள் அனைத்தும் இராமாநுசர் வகுத்தவையே என்று ‘திருமலையொழுகு’ என்ற நூல் வழி அறியலாம்.

திருவேங்கடமுடையானை ‘நெடியோன்’ என்ற பெயரால் இளங்கோவடிகள் கூறியது அப்பெருமானைத் திரிவிக்கிரமனாகக் குறிக்கும் ஆழ்வார் பெருமக்கள் மங்களாசாசனம் வழி அறியலாம். “நெடியோனே வேங்கடவா” என்றார் குலசேகரப் பெருமாள். சடகோபரும் “தாள்பரப்பி மண்தாவிய ஈசனை” என்று சிறப்பித்தார். உச்சிமேற் புலவர் கொள் நச்சினர்க் கினியாரும் நிலங்கடந்த நெடு முடியண்ணலை நோக்கி உலகம் தவம் செய்து வீடு பெற்ற மலை” என்று திரிவிக்கிரமானகவே திருமாலவனான எம்பெருமானைக் கூறி மகிழ்வதைக் காணலாம். வேதத்திலும், “அகில புவனங்களையும்; தன் மூவடிகளின் கீழ் ஒடுக்கியவன் எவனோ, அப்பெருமான் மலையில்

அருள் பாலிக்கிறான்” என்ற கருத்து வருகிறது என்று காட்டி, திருவிக்கிரமனாகிய திருவேங்கடமுடையான் திருமலையில் நித்தியவாசம் செய்தருளுகின்ற சிறப்பை அறியலாம்.

இந்த விழுப் பொருளையே, ‘இழைத்தா ரொருவருமில்லா மறைகளை யின்றமிழால் குழைத்தாராகிய குருகைப்பிரானும்’

“குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்த பிரான்
சென்று சேர்திரு வேங்கட மாமலை”

என்று அருளிச் செய்வார். இக்கருத்தை உட்கொண்ட சுவாமி தேசிகனும்,

“விண்ணவரும் மண்ணவரும்
விரும்பும் வெற்பு
வேங்கடவெற் பெனவிளங்கும்
வேத வெற்பே”

என்ற அடிகளில் ‘வேத வெற்பு’ எனப் போற்றியதை அறியலாம்.

இடைக்கால இலக்கியத்தில் திருவேங்கடம் பற்றி வரும் செய்திகளை ஆராய்வோம். இடைக்கால இலக்கியங்களான

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
கம்பராமாயணம்
வில்லிபுத்தூரார் பாரதம்

ஆகியவற்றில் வரும் செய்திகளை காணலாம்.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

ஆழ்வார்கள் பதினொருவர் இறைவன் மீது அருளியுள்ள இருபத்திரண்டு பிரபந்தகளும் மதுரகவிகள் நம்மாழ்வார் மீது அருளியுள்ள ஒரு பிரபந்தமும், திருவரங்கத்தமுதனார் உடையவர்மீது அருளியுள்ள ஒரு பிரபந்தமுகாக இருபத்து நான்கு பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. இந்நூலில் இசைப்பாத் தொகுதிகள் மூன்றும், இயற்பாத் தொகுதி ஒன்றுமாக நான்கு பிரிவுகள் உள்ளன. இந்த நூலிலுள்ள பாசுரங்கள் 108 திவ்யதேசங்களில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியுள்ள எம்பெருமானை பற்றியனவாகும்.

கம்பராமாயணம்

கம்பராமாயணத்தில் வேங்கடத்தைப் பற்றிய குறிப்பு வருகின்றது. கிட்கிந்தா காண்டத்தில் நாடவிட்டபடலத்தில் இத்தகைய குறிப்புகளைக் காண்கின்றோம். இராமபிரானது கட்டளைப்படி சுக்கிரீவன் வானரைப்படைத் தலைவர்களைச் சீதாபிராட்டியைத் தேடும்படி எல்லாத் திசைகளிலும் அனுப்புகின்றான். ஒவ்வொரு திசையிலும் வானரவீரர்கள் செல்லுகின்றனர். தென்திசையை நோக்கிச் செல்லும் வானரவீரர்களை நோக்கி அவர்கள் தேடவேண்டிய பல இடங்களைக் குறிப்பிட்டு அவர்கள் செல்லும் வழியினையெல்லாம் விளக்குகின்றான். அப்பொழுது வேங்கடத்தின் வளம், பெருமை, முதலிய செய்திகளையும் தருகின்றான்.

"வடசொற்கும் தென்சொற்கும் வரம்பிற்றாய்
நான்மறையும் மற்றை நூலும்
இடைசொற்ற பொருட்கெல்லாம் எல்லையதாய்
நல்லறத்துக் கீறாய் வேறு
புடைசுற்றுந் துணையின்றிப் புகழ்பொதிந்த
மெய்யேபோற் பூத்து நீன்ற
அடைசுற்றுந் தண்சாரல் ஓங்கியவேங்
கடத்திற்சென் றடைதிர் மாதே"

திருமலையில் உடல் தூய்மையும் மனத் தூய்மையும் உடைய அந்தணர்கள் மூழ்கி நீராடும் துறைகளும் முனிவர்கள் உறைகின்ற ஆசிரமங்கள் உள்ளன. மேகங்கள் அம்மலையை தொடும் வண்ணம் சூழ்ந்துள்ளன. தேவ மாதர்கள் தங்கள் இசைப்பாட்டுக்கு ஒத்துவருமாறு கின்னரங்களின் நரம்புகளை வருடுந்தோறும் உண்டாகும் ஓசையினால் யானைகளின் இளங்கன்றுகளும் புலியின் குட்டிகளும் தம்முள் பகையின்றி உறங்கும் இடங்கள் அம்மலையில் உள்ளதை கவிச்சக்கரவர்த்தி கம்பர் விளக்கியுள்ளார்.

வில்லிபாரதம்

வில்லிபாரதத்திலும் திருவேங்கடத்தைப்பற்றி ஒரு குறிப்பு வருகின்றது. பாண்டவர்கள் விசுவகர்மனால் புதிதாக உருவாக்கப்பட்ட அழகிய நகரிலிருந்து கொண்டு ஆட்சி புரிந்த நாளில் வேடவர்களால் கவரப்பெற்ற ஓர் அந்தணனின் ஆநிரைகளை மீட்கும் பொருட்டு வில்லெடுக்க ஆயுத சாலையை நோக்கிச் செல்லுங்கால் தருமனுடன் திரௌபதியிருப்பதைப் பார்த்துவிட்டான் அருச்சுனன். அந்தப்பாவம் தீரும் பொருட்டு நாரத முனிவரின் யோசனைப்படி அவன் தீர்த்த யாத்திரையை மேற்கொள்ள வேண்டியதாயிற்று. கங்கையில் பாதாளலோகம் சென்று, அவளை மணந்து, நாகலோகத்தில் சின்னாட்கள் தங்கி இராவணனை மகனாகப் பெற்றுப் பூலோகத்திற்கு வருகின்றான். பின்னர் இமயமலையிலுள்ள தீர்த்தங்கள், யமுனை முதலிய தீர்த்தங்களில் நீராடி, தென்றிசை நோக்கி வந்தவன் திருவேங்கடத்தை அடைகின்றான். இதனை வில்லிபுத்தூரார்,

"பத்திக்கு வரம்பாகிய பார்த்தான் பலதீர்த்தம்

அத்தி க்கினும் எத்திக்கினும் ஆம் என்றவை ஆடி

சித்திக்கொரு விதையாகிய தென்னாட்டினை அணுகி

தத்திச்சொரி யருவித்தட அரவக்கிரி சார்ந்தான்"

என்று குறிப்பிடுகிறார். தென்னாடு பல சிவத்தலங்கட்கும் விஷ்டுணுத்தலங்கட்கும் இடமாய் அமைந்து அடியார் கருதிய பயன் கைகூடுவதற்கு உரிய இடமாக இருத்தலால் 'சித்திக்கொரு விதையாகிய' என்ற அடை கொடுத்து சிறப்பிக்கப் பெற்றது. திருமலையில் ஆகாய கங்கை, பாபவிநாசம், பாண்டவ தீர்த்தம், குமாரதாரை, தும்புரு தீர்த்தம், கோனேரி, ஆழ்வார்தீர்த்தம் போன்ற பல புண்ணிய தீர்த்தங்கள் உள்ளதால், 'தத்திச் சௌரி அருவி' எனச் சிறப்பிக்கப் பெற்றுள்ளது. இங்ஙனம் 'திருவேங்கடம்' வில்லிபுத்தூரார் வாக்கிலும் இடம் பெற்று நிலையான புகழுடன் விளங்குகின்றது.

முடிவுரை:

தமிழ் இலக்கியத்தில் திருவேங்கடத்தின் சிறப்பும் திருவேங்கடவனின் பெருமைகளையும், திருவேங்கட மலை குறித்த இயற்கை வருணனைகளையும் தமிழ் கவிகள் பல்வேறு வகையில் போற்றியுள்ளனர். பேராசிரியரும் தமிழ் இலக்கியத்தில் திருவேங்கடம் எங்ஙனம் சிறப்பிக்கபட்டுள்ளது என்பதை உற்று நோக்கி விளக்கியுள்ளார். இவ்வாய்வுக் கட்டுரையும் பேராசிரியர் பார்வையில் திருவேங்கடக் கருத்துகளை விளக்கியுள்ளது.

பார்வை நூல்கள்

1. தமிழ் இலக்கியம்
2. திருக்குறள்
3. ஆழ்வார்கள் மங்களாசாசனம் பாடபெற்ற நூல்கள்
4. நாலாயிர திவ்யப்பிரபந்தம்
5. பேராசிரியரின் திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
6. ஆழ்வார்கள்
7. கம்பராமாயணம்
8. வில்லிபாரதம்